பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 02 திங்கட்கிழமை 19.09.2022 கதிர் 205

## விடைபெறும் மகாராணி!



### லண்டனில் குவியும் உலகத் தலைவர்கள்

மறைந்த பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதி ஊர்வலம் இன்று நடைபெறுகின்றது. 2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக அநுராதபுரத்தில் கையெழுத்துப் போராட்டம்

### மூவின சமூகத்தினரும் திரண்டு பங்கேற்பு







இலங்கையில் மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இன்று அநுராதபுரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. 2

## புதிய அமைச்சரவை நியமனத்தில் ரணில் – 'மொட்டு' இடையே இழுபறி



புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சிக்கும் இடையில் இழுபறி நிலைஏற்பட்டுள்ளது.

புதிய 12 அமைச்சர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். இந்நிலையில் 11 பேரின் பெயர் அடங்கிய பட்டியலை மொட்டு'க் கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. 2

## ஜெனிவா ஊடாக இலங்கையை ஒருபோதும் முடக்கவே முடியாது!

### இப்படி அடித்துக் கூறுகின்றார் பிரதமர்



தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள்கூட விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த ஆட்சிக்கு எதிரான சக்திகளே ஜெனிவாவில் முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்றன. ஜெனிவா ஊடாக எம்மை முடக்கும் முயற்சி ஒருபோதும் கைகூடாது.

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற 2

## யானைகளுக்கு காகத்திடம் கையேந்த வேண்டிய நிலை

### கிண்டலடிக்கின்றார் சஜித்



ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் எதிர்காலத்தில் நெலும் மாவத்தையில், காக்கையிடம் வேட்புமனு பெற வேண்டிய நிலை ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 2

## 'மேலவை இலங்கை கூட்டமைப்பு' அடுத்த தேர்தலில் அதிரடி காட்டும்

### சூளுரைக்கின்றார் விமல்



இலங்கையில் அடுத்து வரும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை 'மேலவை இலங்கை கூட்டமைப்பு'பாகவே நாம் எதிர்கொண்டு அதிரடி காட்டுவோம்.

-இவ்வாறு மேற்படி கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மேலவை இலங்கை 2

## போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு மையம்

யாழ்ப்பாணம்மாவட்டத்தில் போதைப்பொருள்பாவனைக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், புனர்வாழ்வு மையம் அமைப்பது தொடர்பில் யாழ்.

மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றகலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னுக்கு 2

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவனைக் காணவில்லை

### விடுதியிலிருந்து கடிதம் கண்டெடுப்பு

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் நான்காம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

நேற்று பேராதனைப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய அஞ்சன குலதுங்க என்ற மாணவனே காணாமல்போயுள்ளார்.

குறித்த மாணவன் கடந்த 16ஆம் திகதி எழுதினார் என்று சந்தேகிக்கப்படும் கடிதம் ஒன்றை அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்து பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். 2

## அரசியல் தீர்வு கோரி மட்டக்களப்பில் பட்டங்கள் பறக்க விட்டுப் போராட்டம்




'வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல்தீர்வுவேண்டும்' எனும் தொனிப்பொருளில் 100 நாட்கள் செயல்முனைவின் 50ஆவது நாளையொட்டி மட்டக்களப்பு - கல்லடி கடற்கரையில் இன்று பட்டங்கள் பறக்க விட்டுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

50 ஆவது நாள் போராட்டத்தையொட்டி வடக்கு -கிழக்கின் 8 மாவட்டங்களிலும் இன்று போராட்டங்கள் 2

## புதிய அமைச்சரவை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பெயர்ப்பட்டியலில் இருந்த இருவருக்கு உடனடியாக அமைச்சுப் பதவி வழங்க முடியாது எனவும், அவ்வாறு வழங்கினால் மக்கள் மத்தியில் எதிர்ப்பு அலை உருவாகும் எனவும் ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்விருவருக்கும் அமைச்சுப் பதவி கட்டாயம் வேண்டும் என்று 'மொட்டு'க் கட்சி அறிவித்துள்ளது. இதனால் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மேலவை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் முதலாவது நிறைவேற்றுக்குழுக் கூட்டம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசை அமைக்குமாறு கோரினோம். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. மொட்டு, யானை ஆட்சியே தொடர்கின்றது. அந்த ஆட்சியின்கீழ் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மட்டுமல்ல அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் எமது கூட்டணி போட்டியிடும் - என்றார்.

## ஜெனிவா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது எனக் கூறியவர்கள்தான், பொருளாதார விவகாரம் தொடர்பிலும் ஜெனிவாவில் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள்கூட முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். எமது அரசு ஜனநாயக ஆட்சி முறைமை பின்பற்றுகின்றது. அந்தவகையில் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வரலாற்றில் என்றுமில்லாத நெருக்கடியை - சவாலை எதிர்கொண்டுள்ளோம். இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்ற நம்பிக்கையை சர்வதேசம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சாதக பதில் கிடைத்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் உதவும். எனவே, ஜெனிவா ஊடாக எம்மை முடக்கலாம் என்ற முயற்சி ஒருபோதும் கைகூடாது - என்றார்.

## பயங்கரவாத..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மதகுருமார்கள், மூவின மக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## யானைகளுக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியதேசியக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் சென்று தமது துயரங்களைத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும், தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அடகு வைக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நாட்டின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் வரை எந்தவொரு உதவியும் வழங்கப்போவதில்லை என சர்வதேச அமைப்புக்கள் தெரிவித்துள்ளன என்றும் சஜித் பிரேமதாஸ மேலும் கூறினார்

## பேராதனைப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாணவன் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பில் பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 - 23 வயதுக்கும் இடைப்பட்ட பல இளைஞர்கள் அடிமையாகியுள்ளனர். இதனால் 10 பேர் வரையில் கடந்த 3 மாதங்களுக்குள் உயிரிழந்துள்ளனர். 320 பேர் வரையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். யாழ். போதனா மருத்துவமனையில் 134 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதால் யாழ். மாவட்டத்திலேயே புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இதற்கான காணிகளை வழங்க முடியும் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் மேற்படி கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

விரைவில் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

## விடைபெறும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் ராணியின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நேரம் இலங்கை நேரப்படி இன்று காலை 11 மணியுடன் முடிவடைந்தது.

இறுதி ஊர்வலத்தைக் காணவும், இறுதிச் சடங்குகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் காணவும் இலண்டன் நகரில் ஏராளமானோர் குவிந்துள்ளனர்.

மகாராணியின் உடலைத் தாங்கிய பேழை பிரிட்டன் நேரப்படி காலை 11 மணிக்கு வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அங்கு சமய நிகழ்ச்சிகள் நடைபெறும். இதில் பிரிட்டன் அரசியல்வாதிகள், வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் பெருமளவிலான விருந்தினர்கள் கலந்துகொள்கின்றார்கள்.

அரச குடும்ப உறுப்பினர்களும் இறுதி ஊர்வலத்துடன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு செல்கின்றனர்.

அரச மரியாதையுடன் நடைபெறும் மகாராணியின் இறுதிச் சடங்கில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 2,000 தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகாராணியின் உடல் ஊர்வலமாக வின்ட்சர் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வின்ட்சரில் உள்ள மன்னர் ஜோர்ஜ் ஞாபகார்த்த தேவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இதேவேளை, பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவை அடுத்து இன்று இலங்கையில் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்று விசேட அரச விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.

## அரசியல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு - கல்லடி கடற்கரையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கோரிக்கைகள் அடங்கிய வாசகங்கள் கொண்ட பட்டங்களைத் தயார்படுத்தி அதனைப் பறக்கவிட்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622












# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சமூக விரோதிகளை ஒழிப்போம்!

நம் சமூக விழுமியங்களை இழந்து, வரலாற்றுப் பெருமைகளையும் உயர்வுகளையும் தொலைத்து, மேலான பண்பாட்டுக் கோலங்களைச் சீரழித்து, உலகமயமாதலின் பின்னடைவுப் பக்கங்களை மட்டும் அரவணைத்துக் கொண்டு நமது இனம் – குறிப்பாக இளைஞர் சமுதாயம் – பேரழிவை நோக்கி வேகமாகப் பயணிக்கின்றதோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

வெளியாகும் செய்திகள், ஆய்வுத் தகவல்கள், புள்ளிவிவரங்கள் இந்த பேராபத்துக் குறித்துத்தான் அபாய எச்சரிக்கை எழுப்பியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியதில் இதுவரையில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 320 பேர் வரையில் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் போதைக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மையத்தில் இரண்டு மாத காலப் பகுதிக்குள் 134 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களில் பெரும்பாலானோர் 18 இற்கும் 23 இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களே எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் அதிக போதைப் பாவனைக்கு உள்ளானவர்கள் வாழும் கிராமமாக சுமார் 20 கிராமங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய் பிரதேசத்தில் ஹெரோய்னுக்கு அடிமையான 14 வயது சிறுவன் அந்தப் போதையில் 7 வயதுச் சிறுமியை வன்புணர்ந்துள்ளான்.

அதே கோப்பாய் பிரதேசத்தில் அதேபோன்ற போதைப் பொருளுக்கு அடிமையான மூன்று இளைஞர்கள் அந்தப் பகுதியை சேர்ந்த 15 வயதுச் சிறுவனைக் கூட்டாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்திருக்கின்றனர்.

போதைப் பொருளுக்கு அடிமையான சொந்த சகோதரனால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட இளம் யுவதி, அந்த மன உளைச்சலைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார் என்னும் அதிர்ச்சி தகவல் அண்மையில் வெளியாகி இருந்தது.


போதைப் பொருள் பாவனையால் பல நூறு குடும்பங்கள் நம் மத்தியில் மோசமான வன்முறை மற்றும் நெருக்கடிகளை எதிர்கொண்டு தத்தளித்துப் பரிதவிக்கின்றன.

இவையெல்லாம் நமது சமூகம் கட்டறுந்து, மனித மாண்புகளை மறந்து, காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி மெல்ல மெல்ல வீழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அபாய எச்சரிக்கைச் சம்பவங்கள்.

போதை வஸ்து என்னும் பெரும் கொடூரப் புற்றுநோய் சமூகத்தை பீடித்து, தமிழினத்தை அடியோடு வேரறுத்துச் சாய்க்கப் போகின்றது என்பது திண்ணம்.

போதை வஸ்துக்கு அடிமையான சமூகத்தை திருத்த முன்னர், அது தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபட்டு, குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முயலும் அந்த மாஃபியாவுக்கும், அதற்கு வெற்றிலை வைக்கும் அனைவருக்கும் – அவர்கள் சமூகத்தில் எந்த உயர்நிலையில் இருந்தாலும் – அவர்கள் குறித்து அவர்களே வெட்கித் தலை குனிந்து நிற்கும் அளவுக்கு சமூக விரோதிகளாகப் பிரகடனப்படுத்தி, அதற்குரிய முறையில் கையாள வேண்டும்.

இந்தக் கொடூர அரக்கனின் பிடியிலிருந்து சமூகத்தை காப்பாற்ற விரைந்து நாம் காப்பரண் அமைக்காவிடின் நமது அடுத்த தலைமுறை அரோகராதான்.



## இலங்கை அணியை போன்று நாம் ஒன்றிணைந்தால் வெற்றிபெறலாம்!

### ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

இலங்கை அணியினர் ஆசிய கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு பலமாக கடந்த கால தோல்விகளை பயன்படுத்தியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகவே ஒரு நாடாக இலங்கையை வெற்றிபெற வைப்பது கடினமான காரியம் அல்ல எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டமை இலங்கை ஆசிய கிண்ணத்தை கைப்பற்ற உதவியதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி யுள்ளார். ஆசிய கிண்ணம், ஆசிய வலைப் பந்து சம்பியன், பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர் களை கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நாட்டில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவி!

### மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு



குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கான திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

மேலும் மாவட்ட அளவில் பெண்களுக்கான நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

குடும்ப வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு 1938 என்ற தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் குறித்த சேவை 24 மணி நேரமும் இயங்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைக்கிறார் சங்ககார!



வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியில் இலங்கைக்கு வருகை தருமாறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் குமார் சங்ககார அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூர் புகைப்படக் கலைஞர் பிரதீப் கமகேயினால் பிடிக்கப்பட்ட இலங்கையின் இயற்கை காட்சிகளை தனது பேஸ்புக்கில் பகிர்ந்துகொண்ட குமார் சங்கக்கார,

'நிச்சயமாக பிரமிக்க வைக்கிறது! எங்கள் தீவு மிகவும் வித்தியாசமானது மற்றும் அழகானது''.

குறித்த படங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ள குமார் சங்கக்கார, இலங்கை மீண்டும் விருந்தினர்களுக்கான திறக்கப் பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் நினைவூட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள குமார் சங்ககார -

'எங்கள் சுற்றுலாத் துறையை மீட்டெடுக்க உலகெங்கிலும் உள்ள அனைத்து நண்பர்களின் ஆதரவும் எங்களுக்குத் தேவை. இது ஒரு கடினமான ஆண்டு, ஆனால், நமது மக்களின் துணிச்சலான போராட்டங்கள் மற்றும் முயற்சிகளுக்கு நன்றி, இங்கு சில சாதகமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. உலக நாடுகள் பயண ஆலோசனைகளைத் தளர்த்துவதன் மூலம், சுற்றுலாப் பயணிகள் தங்கள் விடுமுறையை நம்பிக்கையுடன் மீண்டும் இங்கு கழிக்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக, தேவையற்ற செய்திகள் நல்ல செய்திகளை விட வேகமாகப் பரவுகின்றன. எனவே தயவுசெய்து இதனைப் பகிரவும்,' - என்று சங்கக்கார தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இங்கிலாந்து ராணியின் இறுதி நிகழ்வுகள் இன்று

## உலகத்தலைவர்கள் பலரும் பங்கேற்பு





லண்டன், செப்.19

இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கு, 10 நாள் அஞ்சலிக்கு பிறகு இன்று மாலை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக பல்வேறு நாட்டு தலைவர்களும், மக்களும் லண்டனில் குவிந்து வருகின்றனர். இங்கிலாந்து ராணியாக 70 ஆண்டுகள் இருந்து சாதனை படைத்த இரண்டாம் எலிசபெத், கடந்த 8 ஆம் திகதி இறந்தார். தனது 96 ஆவது வயதில் வயது மூப்பு, நோய்கள் காரணமாக இறந்த அவருடைய உடல், கடந்த 10 நாள்களாக நடந்த அஞ்சலிக்கு பிறகு இன்று மாலை வெஸ்ட்மினிஸ்டர் அபேவில் அடக்கம் செய்யப்படுகிறது.

லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் கடந்த 4 நாள்களாக பொதுமக்கள் அஞ்சலிக்காக அவருடைய உடல் வைக்கப்பட்டு இருந்தது. அவருக்கு நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வெஸ்ட் மினிஸ்டர் மண்டபத்தில் இருந்து வெஸ்ட் மினிஸ்டர் அபேவுக்கு, குதிரைகள் பூட்டிய பீரங்கி வண்டியில் லண்டனில் முக்கிய வீதிகள் வழியாக ராணியின் உடல் ஊர்வலமாக எடுத்து செல்லப்படுகிறது. ராணியின் விருப்பப்படி, கடந்தாண்டு இறந்த அவருடைய கணவர் பிலிப்பின் உடலும், ராணியின் உடலுக்கு அருகே இன்று அடக்கம் செய்யப்படுகிறது.

அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள், பல்வேறு நாட்டு மன்னர்கள் என 500 பேரும், உலகின் பிரபல தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் என இதர 1500 பேரும் என மொத்தம் 2 ஆயிரம் பேர் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். இதில், மக்களும் பங்கேற்பதற்காக இங்கிலாந்து முழுவதும் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் கடந்த 10 ஆண்டுகளில் நடந்திராத வகையில் உலக தலைவர்கள் அனைவரும் குவியும் முக்கிய நிகழ்ச்சியாக ராணியின் இறுதிச் சடங்கு அமைகிறது. எனவே, உலகத் தலைவர்களின் பாதுகாப்பு பணியில் ராணுவ வீரர்களும், பொலிஸாரும் லண்டன் முழுவதும் குவிக்கப்பட்டு உள்ளனர். இறுதிச் சடங்கில் 10 லட்சம் மக்கள் பங்கேற்பார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு பணியில் 10 ஆயிரம் பொலிஸாரும், 8 ஆயிரம் இராணுவ வீரர்களும் ஈடுபட்டுள்ளனர்.



# பெண்கள் கல்வியை மறுக்கும் ஆப்கானுக்கு ஐ.நா. கண்டனம்

காபூல், செப் 19


ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல தடை விதித்து, அவர்களுக்கு கல்வி அளிக்க மறுத்து வருவதற்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் கடந்தாண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி தலிபான்கள் ஆட்சி கைப்பற்றிய பிறகு பெண்களின் அடிப்படை பேச்சு சுதந்திரம், உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் வேலைக்கு செல்லக் கூடாது, வெளியில் செல்லும் போது புர்கா அணிய வேண்டும் என்பன உள்ளிட்ட கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், 7 வயது முதல் 12 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டு நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்தது. இவர்கள் பள்ளி செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை. இதனையொட்டி, நங்காகர், பர்வான் மாகாணங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு 'ஓராண்டு இருண்ட காலம்' என்ற தலைப்பில் கடிதம் எழுதி உள்ளனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா தூதர் மார்கஸ் பொட்செல், தலிபான் தலைமையிலான அரசு 7 முதல் 12 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுப்பது வெட்கக்கேடானது. இது போன்ற அடிப்படை சுதந்திரம் பறிக்கப்படுவது பாதுகாப்பின்மை, வறுமை உள்ளிட்ட பொருளாதார சிக்கல்களை மேலும் தீவிரப்படுத்தும். எனவே, பெண் குழந்தைகளை பள்ளி செல்ல அனுமதிக்க வேண்டும் என கடும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகெங்கும் அடுத்தாண்டில் பெரும் பொருளாதார வீழ்ச்சி

## எச்சரிக்கின்றது உலக வங்கி




வாஷிங்கடன், செப்.18

சர்வதேசப் பொருளாதாரம் 1970 ஆம் ஆண்டுக்கு பிறகு மந்த நிலையை நோக்கிச் செல்வதாக உலக வங்கி கணித் துள்ளது. தற்போதே அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன என உலக வங்கி வெளியிட்ட ஆய் வறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த சர்வதேச அளவில் மத்திய வங்கிகள் கடன்களுக் கான வட்டி விகிதங்களை உயர்த்தி வருகின்றன.

குறிப்பாக, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கடன்களுக்கான வட்டிவிகிதங்களை உயர்த்தி வருகின்றன.

இதனால் பணப் புழக்கத்தை கட் டுப்படுத்துவதன் மூலம் பண வீக்கம் குறையும் என அந் நாடுகள் நம்புகின்றன.

ஆனால்,வட்டிவிகிதங்களை உயர்த் துவதால்,

முதலீடுகள் குறைவதோடு வேலைவாய்ப்பின்மையும் உருவாக வாய்ப்புள்ளதால் பொருளாதார வளர்ச்சி குறையும் என உலக வங்கி கணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வட்டி விகிதங்களை உயர்த்துவது, கொரோனாப் பெருந்தொற்று பரவலுக்கு முன் இருந்த பொருளாதார நிலைக்கு செல்ல உதவிகரமாக இருக்காது என்று உலகவங்கி தெரிவித்துள்ளது.

இதனைத் தடுக்க சர்வதேச அளவில் உற்பத்தியை அதிகரிப்பதோடு, விநியோகச் சங்கிலி தடைபடாமல் இருப்பதை பார்த்துக்கொள்ள வேண்டும் என உலக வங்கி ஆலோசனை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராமேஸ்வரத்தில் ஐந்து மணி நேரம் ஓ.பன்னீர்செல்வம் சிறப்பு ஹோமம்



ராமேஸ்வரம்,செப்.18
ராமேஸ்வரத்தில் 5 மணி நேரம் சிறப்பு ஹோமம் நடத்தினார் ஓ.பன்னீர்செல்வம். ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவில் சகல தோ நிவர்த்தி ஸ்தலமாக போற்றப்படுகிறது. இராவ ணனை வதம் செய்து விட்டு வந்த ராமர் பிரம்மஹத்தி தோம் நீங்குவதற்காக மணல் லிங்கம் அமைத்து வழிபாடு செய்தார் என்பது புராண தகவல்.

ராமேஸ்வரம் கோவிலுக்கு இந்தியா முழுவதும் இருந்து பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்த நிலையில் முன்னாள் முதலமைச்சரான ஓ.பன்னீர்செல்வம் நேற்று ராமேஸ்வரம் வந்து அங்குள்ள ஒரு தனியார் மடத்தில் ஐந்து மணி நேரம் சிறப்பு ஹோமம் செய்தார். அங்கு நவக்கிரக ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள் நடைபெற்றன. இதைத்தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது குடும்பத்தினர் கோவிலின் வளாகத்தில் சிறப்பு ஹோமம் செய்து மூலவருக்கு ருத்ராபிஷேகம் செய்தனர். இந்த வழிபாடு பல ஜென்ம பாவங்களை போக்கும் என்றும் குடும்ப அபிவிருத்தியை வழங்கும் என்றும் கூறப்படு கிறது. ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க.வில் பல்வேறு பொறுப்புகளை வகித்த நிலையில் ஒற்றை தலைமை என்ற பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. இதில் அ.தி.மு.க. முக்கிய தலைவர்களாக இருந்த எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகிய இருவருக்கும் இடையே கடும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் இரு துருவங்களாக பிரிந்து விட்டனர். தற்போது ஓ.பன்னீர்செல்வம் அரசியலில் பின்னடைவை சந்தி த்துள்ளார். எனவே மீண்டும் அரசியலில் முக்கிய இடத்தை பெறுவதற்காக ஜோதிடர்களின் ஆலோசனை யின்பேரில் ஓ.பன்னீர்செல்வம் இந்த வழிபாடுகளை நடத்தினார் எனக் கூறப்படுகிறது. ராமேஸ்வரத்தில் வழிபாடுகளை முடித்துக்கொண்ட ஓ.பன்னீர்செல்வம் குடும்பத்தினர் காசிக்கு சென்று வழிபாடு செய்ய உள்ளனர் என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள் ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பள்ளிக்கூட லிப்ட் கதவுகளுக்கு இடையில் சிக்கி ஆசிரியை பலி

### மும்பையில் பரிதாப சம்பவம்



மும்பை,செப்.19
பள்ளிக்கூடத்தில் லிப்ட் கதவுகளுக்கு இடையில் சிக்கி ஆசி ரியை ஒருவர் பலியான சம்பவம் மும்பை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மராட்டிய மாநிலம் மும்பை மலாடு சிஞ்சோலி பந்தர் பகுதி யில் உயர்நிலை பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இந்த பள்ளி யில் ஆசிரியராக பணியாற்றி வருபவர் ஜெனல் பெர்னாண்டஸ் (வயது 26). இவர் பள்ளியின் 6 ஆவது மாடியில் மாணவர் களுக்கு பாடம் நடத்திவிட்டு ஆசிரியர்கள் ஓய்வு அறைக்குச் செல்வதற்காக 2 ஆவது மாடிக்கு லிப்ட் ஏறியுள்ளார். அப்போது லிப்டின் முன் கதவு மூடப்படாத நிலையில் லிப்ட் நகரத்தொடங்கி யுள்ளது. இதில் ஜெனல் லிப்ட் கதவுகளுக்கு இடையில் சிக்கிக் கொண்டார். லிப்ட் மேலே செல்ல செல்ல ஆசிரியரின் தலையில் பயங்கரமாக அடிபட்டுள்ளது. பின்னர் அவரின் அலறல் சத்தம் கேட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அங்கு வந்து அவரை மீட்டுள்ளனர்.

காயமடைந்த ஆசிரியை மருத்துவமனையில் அனுமதி க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

அந்த பள்ளியில் சிறிது மாதத்துக்கு முன்புதான் அவர் பணியில் சேர்ந்தார் எனவும் ஒரு வருடத்துக்கு முன்புதான் அவருக்குதிருமணம்முடிந்ததாகவும்தகவல்வெளியாகியுள்ளது. இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பந்தப்பட்ட அந்த லிப்ட் சிறிது நாட்களுக்கு முன்னர்தான் பழுது பார்க்கப்பட்டது என்றும் இது போன்ற சம்பவம் நடைபெறுவது இதுதான் முதல் முறை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் திரையரங்குகள் 30 ஆண்டுகளுக்குப் பின் திறப்பு!

### மக்கள் குடும்பம் குடும்பமாகப் படையெடுப்பு

ஸ்ரீநகர்,செப்.19
ஜம்மு - காஷ்மீரில் முதல் முறையாக 'மல்டிப்ளக்ஸ்' சினிமா தியேட்டர்கள் நேற்று தி றந்து வைக்கப்பட்டன.

ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாத நடவடிக் கைகள் காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக சினிமா தியேட்டர்கள் மூடப்பட்டிருந்தன. இந்நிலையில் மத்திய அரசின் இளைஞர் நலத்துறை, அந்தந்த மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, இங்கு தியேட்டர்களை திறந்து வருகிறது. இதன்படி புல்வாமா மற்றும் ஷோபியன் ஆகிய இரு இடங்களில் மல்டிப்ளக்ஸ் சினிமா அரங்குகளை திறந்து வைத்த துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, "இது ஒரு வரலாற்று நிகழ்வு," எனக் குறிப்பிட்டார். 'இதேபோன்று அனந்த்நாக், ஸ்ரீநகர், பந்திபோரா, ரஜவுரி, பூஞ்ச் ஆகிய இடங்களிலும் விரைவில் தியேட்டர்கள் திறக்கப்படும்' என, அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தநிலையில் தியேட்டர்கள் திறப்பால் சினிமா ரசிகர்கள் தியேட்டரை நோக்கி படையெடுத்து வருகின்றனர். குடும்பம் குடும்பமாக வந்து தியேட்டரில் படத்தை கண்டுகளித்தனர். 30 ஆண்டுகளுக்கு பிறகு நாங்கள் சினிமாவை கண்டுகளித்தோம் என உள்ளூர் வாசி ஒருவர் தெரிவித்தார்.



## புனே விபத்தில் ஒருவர் பலி



மும்பை,செப்.19
மராட்டிய மாநிலம் புனேவில் பஸ் மீது கண்டெய்னர் லொறி மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மராட்டிய மாநிலம், புனேவில் பஸ் மீது கண்டெய்னர் லொறி மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மராட்டிய மாநில அரசு பஸ் ஒன்று புனே நோக்கி சென்று கொண்டிருந்தது. இன்று அதி காலை 12.30 மணியளவில் புனே-சாஸ்வாட் சாலையில் பஸ் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக பஸ் மீது கண்டெய்னர் லொறி மோதியது. இந்த விபத்தில் பஸ்ஸில் இருந்த பயணி ஒருவர் உயிரிழந்தார். மேலும் 3 பேர் காயமடைந்தனர். விபத்து குறித்து தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயம டைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## லடாக் யூனியன் பிரதேசத்தில் 2 ஆவது நாளாக நிலநடுக்கம்



லடாக் யூனியன் பிரதேசத்தில் இரண்டாவது நாளாக இன்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 4.0 என்ற அளவில் இந்த நிலநடுக்கம் பதி வானது.

அடுத்தடுத்து ஏற்படும் நிலநடுக் கத்தால் அங்குள்ள மக் கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தேசிய நில அதிர்வுமையம் வெளியிட்ட செய் தியில், "லடாக்கின் லேவில் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.36 மணியளவில் 4.0 ரிக்டர் அள விலான நிலநடுக்கம் உணர பட்டது.

அதேபோல், இன்று காலை 9.30 மணியள வில் கார்கிலில் 4.3 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அம்பாறை அறநெறிப் பாடசாலை வளவாளர்களுக்குக் கொடுப்பனவு





(நூருல் ஹுதா உமர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் கற்கைகள் நிலையத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நடத்தப்பட்டு வரும் பண்ணிசை, யோகாசன, பரதநாட்டிய சான்றிதழ் பயிற்சி நெறிகளை கற்பிக்கும் வளவாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனின் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வே.ஜெகதீசன், காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், மாவட்ட செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் லோ.சிவலோஜினி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் கற்கைகள் நிலைய நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கலைமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் நிந்தவூரில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்ற கலை மன்றங்களின் செயற்பாடை இன்னும் மேலோங்கச் செய்வதற்காக கலைமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக்கின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப், நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர் ஜெஸான், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோத்தர் சரீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல், கல்முனை வடக்கு, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய தமிழ்ப்பேசும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்குகின்ற கலை மன்ற உறுப்பினர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மாவடிச்சேனை மீனவர் கடலில் சென்று மரணம்

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நேற்று கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என அவருடன் சென்ற இரண்டு மீனவர்களும் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

கடலுக்குச் சென்று மரணமடைந்த நபர் மாவடிச்சேனை அஹமட் ஹிராஸ் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான இப்றா லெப்பை கலீல் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# கல்முனையில் மாநகர சபையின் உறுப்பினருக்கு அஞ்சலி நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் காலம்சென்ற கல்முனை மாநகர சபை உறுப்பினர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் பூதவுடல் கல்முனை மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் இறுதி அஞ்சலிக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை மாநகர சபையின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இரங்கல் கடிதம் சபையில் வாசிக்கப்பட்டு அவரது குடும்பத்தினரிடம் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக கலந்துகொண்ட ஐ.தே. கட்சியின் முக்கியஸ்தர்களினால் கையளிக்கப்பட்டது. அத்துடன் மாநகர முதல்வர், உறுப்பினர்கள் சிலரால் இரங்கல் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இரங்கல் கவிதையும் வாசிக் கப்பட்டது. இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலா ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழி யர்கள், பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்கள், ஐ.தே.கட்சியின் அமைப்பாளர் யூ.எல். ஆதம்லெப்பை, அவரது குடும்பத்தின பொதுமக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையிலான ஊர்திவழி கையெழுத்து போராட்டம் வவுனியா வந்தடைவு





பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்ககோரிய ஊர்தி வழிகையழுத்து போராட்டம்நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வவுனியாவை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையான ஊர்திவழி கையெழுத்து போராட்டம் காலை 10 மணியளவில் வவுனியா தமிழரசுக்கட்சியின் தலைமைஅலுவலகமானதாயகத்தில்ஆரம்பிக்கப்பட்டு நகரின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழரசுக்கட் சியின் வவுனியா கிளை யின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடதக்கது.

# தேசியமட்ட துடுப்பாட்ட அணிக்குள் உள்வாங்கப்பட்ட மாணவிக்கு இராணுவத்தினரால் புதிய வீடு அமைப்பு!







தேசிய மட்ட துடுப்பாட்ட அணிக்குள் உள்வாங்கப்பட்ட யாழ். சுழிபுரம் மாணவிக்கு இராணுவத்தினரால் புதிய வீடொன்று புனரமைத்து கொடுக்கப்படவுள்ளது.

இராணுவத்தின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட் டுக்கான அடிக்கல் யாழ்ப்பாணத்தில் நாட்டி வைக்கப்பட் டுள்ளது.

பத்தொன்பது வயதிற்குட்பட்ட இலங்கை தேசிய துடுப்பாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்ட யாழ். சுழிபுரம் கிழக்கு பறாளய் பகுதியை சேர்ந்த மாணவியான செல்வராசா கிறிஸ்ரிகாவின் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு இலங்கை இராணுவத்தின் 513 ஆவது படைப்பிரிவு 16 ஆவது கெமுனு படையணி என்பவற்றின் முயற்சியால் கொள்வனவு செய்யப் பட்ட காணியில் புதிய வீடு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்போது பிரதம விருந்தினராக 51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் கே.எ.எ.உதயகுமார கலந்து சிறப்பித்துள்ளார்.

இதற்கான மனித வள உதவியை 16 ஆவது கெமுனு படையணி வழங்குகின்றது. இந்நிகழ்வில் அரச அதி காரிகளும், பொதுமக்களும், இராணுவத்தினரும் கலந்து கொண்டனர். இந்த வீடு அமைப்பதற்கான நிதி அனுசர ணையை தியாகி அறக்கட்டளை வழங்குகின்றது. வீட்டிற்கான காணியும் இரா ணுவத்தினராலேயே வழங்கப்பட்டுள்ளது.

# முன்பு ஒரு மாதம் 20 ஆயிரம் ரூபா இப்போது 10 நாட்களுக்கு மட்டுமே

## கொழும்பு மக்கள் விசனம்

பத்து மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால்மிகப்பெரும் சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் என கொழும்பு வாழ் மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது மின்சார மற்றும் நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை, அத்தி யாவசிய பொருள்களின் விலை அதி கரிப்பு மற்றும் நீண்ட நேர மின்வெட்டு தொடர்பில் வெளியிடப்படும் எச்சரிக் கைகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

அத்துடன், 5 ஆயிரம் ரூபா பணம் என்பது தற்போது மிகவும் சாதாரணமாக ஆகிவிட்டது. உணவுகளின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன.

பாண் உண்பதையே நாம் நிறுத்தி விட்டோம். முன்னதாக 20 ஆயிரம் ரூபா விற்கு ஒன்றரை மாதத்துக்கான உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

ஆனால் தற்போது 20 ஆயிரம் ரூபாவிற்கு பத்து நாள்களுக்கான உணவுப் பொருள்களை மாத்திரமே கொள்வனவு செய்ய முடிகிறது.

மாலை நேரங்களில் மின்வெட்டு மேற் கொள்ளப்படுவதால் மாணவர்களுக்கு கல்விகற்கமுடியாதநிலைகாணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சிசுக்களைப் பிரசவித்த தாய்க்கு தியாகி அறக்கொடை நிதியம் உதவி





ஒரே சமயத்தில் 4 சிசுக்களைப் பிரசவித்த தாய்க்கு, தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன், சிசுக்களின் பராமரிப் பிற்காக ஒரு லட்சம் ரூபா உதவித் தொகை வழங்கி யுள்ளார். கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் தாயிடம் இந்த நிதியுதவித் தொகை வழங்கி வைக் கப்பட்டது.

புத்தளம், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் ஹுசைனிய்யா புரத்தை சேர்ந்த 24 வயதான இளம் தாய் ஒருவர், கடந்த மாதம் 27ஆம் திகதி ஓர் ஆண், மூன்று பெண் என நான்கு சிசுக்களை ஒரே சூலில் பிரசவித்திருந்தார். நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியம் அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு, உதவ முன்வந்து, முதல் கட்டமாக மேற்படி ஒரு லட்சம் ரூபாயை வழங்கியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2022இல் வெளியிடப்பெற்றது.